2014 பிப்ரவரி 18]

மக்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள மக்கள் அனைவரும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இங்குள்ள நியாய விலைக் கடையில் 1,500 குடும்ப அட்டைகள் உள்ளன. மக்கள் நீண்டநேரம் வரிசையில் நிற்க வேண்டியுள்ளதால், அங்கே பகுதி நேர கடையை அமைத்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக கேட்டு அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகள் முழுமையாகப் பூர்த்தியாகும் நிலையில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே அதற்கேற்ப நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இதுசம்பந்தப்பட்ட கருத்தைக் கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

71—

மேய்ச்சல் நிலம்

***8838—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேச்சேரியிலுள்ள செம்மறியாட்டு ஆராய்ச்சி நிலையத்திற்குக் கூடுதலாக மேய்ச்சல் நிலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், மேச்சேரியிலுள்ள ஆடு ஆராய்ச்சி நிலையம் 162.50 ஏக்கர் நிலத்திலே இயங்கி வருகிறது. இந்த ஆராய்ச்சி நிலையத்திலே 900 ஆடுகள் ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அங்கே 20 ஏக்கர் நிலத்திலே, தீவனப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, தற்சமயம், அங்கே இருக்கின்ற ஆடுகளுக்கு, அங்கிருக்கின்ற ஆடு ஆராய்ச்சி நிலையம் செயல்படுகின்ற இடமே போதுமானதாக துறை கருதுகிறது. எனவே, மேற்படி இடம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்திலே 162 ஏக்கர் நிலம் இருந்தாலுங்கூட, அங்கு 10 ஏக்கர் நிலத்தில் மட்டுமே ஆடுகளுக்கு தீவனப் பயிர் வளர்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த 10 ஏக்கரில் ஒரு ஏக்கருக்கு 15 ஆடுகள்வீதம் 150 ஆடுகள் மட்டும் வளர்த்து பராமரிக்க முடியும். தற்போது, 932 ஆடுகள் உள்ளன. இந்த ஆராய்ச்சி நிலையத்திலுள்ள 150 ஏக்கர் நிலத்தையும் சமன்படுத்தி, பண்படுத்தி, நீர் வசதி ஏற்படுத்தி, ஆராய்ச்சி நிலையத்தை ஆடுகள் ஆராய்ச்சிக்காக முன்னேற்றம் செய்திட அரசு முன்வரவேண்டும். இந்த ஆராய்ச்சி நிலையத்தில் 2 மருத்துவர்களும், 2 மருத்துவரல்லாத காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டும். அதேபோல தமிழகம் முழுவதும் மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கிறது. காலிப் பணியிடங்களை நிரப்பி, கால்நடை மருத்துவமனையின் வளர்ச்சிக்கு உதவ அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அங்கே இருக்கின்ற 900

2014 பிப்ரவரி 18]

ஆடுகளுக்குத் தேவைப்படுகின்ற வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு எதிர்காலத்திலே அதிகமான நிலம் தேவைப்படும் என்று சொன்னால், அதுகுறித்து துறை ஆய்வு செய்யும் என்பதை தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜஸ்தான், மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு அரசு மானியம் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதனால் அங்கே ஆடு வளர்ச்சி அதிகமாக உள்ளது. தமிழகத்திலும் அதேபோல ஆடு வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற வகையிலே விவசாயிகளுக்கு மானியம் வழங்கினால் விவசாயிகள் அவர்களுடைய பொருளாதாரத்தை நிர்ணயித்துக்கொள்வதற்கு உதவியாக இருக்கும். இன்றைக்கு தமிழக அரசு விவசாயிகளுக்கு இலவசமாக ஆடுகளை வழங்குகிறது. அதேபோல, தேவையான தீவனங்களையும் கொடுத்து உதவினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராஜஸ்தான் மாநிலத்தில் மானியம் தருவதாகச் சொன்னார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் விலையில்லாத ஆடுகள் ஏழைகளுக்கு வழங்கப்படுகின்றன, (மேசையைத் தட்டும் ஒலி) கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. யாதவர்கள்மூலம் இந்தத் தொழிலை செய்கின்ற பீகார், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில்கூட விலையில்லாத ஆடுகள், மாடுகள் கொடுக்கின்ற திட்டம் கிடையாது. தமிழகத்தில் மட்டும்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, இந்தத் திட்டம் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றது. எனவே, மானியம் கொடுக்கின்ற பேச்சுக்கே இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீவனத்தைப் பற்றிச் சொன்னார்கள். தற்சமயம் அத்துணை மாவட்டங்களிலும் கால்நடை உலர் தீவனத்திற்கு

அம்மா அவர்கள் ரேஷன் கார்டு கொடுத்து இருக்கிறார்கள். வெளியிலே 7, 8 ரூபாய்க்கு உலர் தீவனம் விற்கப்படுகிறது. ஒரு ரேஷன் கார்டுக்கு ஒரு கறவை மாட்டிற்கு 3 கிலோ உலர் தீவனம் 2 ரூபாய் என்ற விலையில் இங்கே விற்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அதற்காக தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 125 தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

பட்டா

***27464—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மணவிடுதி மற்றும் பெருங்களூர் கிராமம், போரத்தில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், மணவிடுதி கிராமம், புல எண் 491, மொத்தப் பரப்பு 59.67.0 எக்டேர் கிராமக் கணக்குகளில் காடு புறம்போக்கு என உள்ளதாலும், பெருங்களூர் கிராமம் போரம் புல எண் 505 மொத்தப் பரப்பு 45.54.0 எக்டேர் கிராமக் கணக்குகளில் மேய்ச்சல்தளம் என உள்ளதாலும் மேற்கண்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.